# யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
# கனிஷ்ட வித்தியாலயம்
# மல்லாகம்.

## பாடசாலையின் பெயர் மாற்றம் செய்யப்பட்ட
## ஏழாவது ஆண்டு நிறைவு நாளும்
## பரிசளிப்பு விழாவும்

# அதிபர் அறிக்கை – 2016

காலம் :- 09.03.2016 புதன்கிழமை
நேரம் :- மு.ப 10.00மணி
இடம் :- பாடசாலை முன்றல்
தலைவர் :- திரு சி.சிவகுமாரன் (பாடசாலை முதல்வர்)

பிரதம அதிதி
**திருமதி. விஜயகலா மகேஸ்வரன்**
(கௌரவ சிறுவர் விவகார அமைச்சர், இலங்கை.)

சிறப்பு அதிதி
**திரு. எஸ். தேவமனோகரன்**
(திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)

**திருவாளர் மா.ஆனந்தகுமார்**
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழைக் கல்விக்கோட்டம்.)

கௌரவ அதிதி
**திரு எஸ்.விக்னராஜா**
(ஓய்வுபெற்ற முகாமையாளர், இலங்கைவங்கி, யாழ்ப்பாணம்.)

ஆசியுரை
**சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக்குருக்கள்**
(பிரதமகுரு, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

**09.03.2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைச்சின்னம்

| | | |
|---|---|---|
| மகுடவாசகம் | :- | கல்வியே கருந்தனம் |
| **School motto** | :- | **Education is the most wealth.** |
| தூரநோக்கு | :- | சமநிலை ஆளுமையுடைய பிரஜைகளை உருவாக்குதல். |
| **Vision** | :- | **Creative citizen of balance personality** |
| பணிக்கூற்று | :- | கற்றலுக்குரிய கவிநிலையினூடாக அடைவு மட்டத்தை உயர்த்துதல். |
| **Mission** | :- | **Through the learning situation Enhance the output level** |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக்கீதம்

வாழ்த்திடுவோம் எங்கள் வண்டமிழ்ச் சாலையை
வளர் இளம் சிறுவர் நாம் கூடி
அருளொடு விளங்கிடும் ஐங்கரனைத்தினம்
அன்புடன் நாம் என்றும் துதிப்போம்.
பெருமைகள் அளித்திடும் பெற்றோரைப் பேணியே
பெரியோர்கள் மனங்களில் நிற்போம்.

(வாழ்த்திடுவோம்)

பல்கலை ஓங்க நற் பண்புகள் வளத்திடப்
பாலர்கள் நாம் இங்கு நல்
கல்வியைக் கனிஷ்ட வித்தியாசாலையில்
களிப்பொடு கருத்தினிற் கொள்வோம்.

(வாழ்த்திடுவோம்)

மல்லாக மக்களின் மனங்களில் உறைந்திடும்
மழலை நற் செல்வர்கள் நாமே
பல்லாண்டு காலங்கள் பாரினிற் சிறந்த நற்
பயன்பெற மகிழ்வுடன் உழைப்போம்.

(வாழ்த்திடுவோம்)

வாழிய வாழிய எங்கள் நற் கழகம்
வாணியின் அருளுடன் நீடு
வளர தமிழ் கலைவளம் பொங்கி
வாழிய எங்கள் கலைத்தாய்
வாழ்க ........வாழ்க....... வாழ்க......


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வித்தியாலயத்தில் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து கலவிக்கு அதிபதியான கலைவாணியின் திருவடிகளை வணங்கி ஸ்ரீ துர்க்காதேவியின் திருப்பாதங்களைத் தொழுது இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக உழைத்த முன்னாள் அதிபர்கள்,ஆசிரியர்கள் மற்றும் எமது பாடசாலைச் சமூகத்தினரை மனதில் நிறுத்தி இன்றைய நன்னாளில் இறை ஆசியுடன் 2016ம் ஆண்டிற்கான எமது பாடசாலையின் அதிபர் அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்றைய நன்னாளில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திருமதி. விஜயகலா மகேஸ்வரன்கௌரவ சிறுவர் விவகார அமைச்சர்,இலங்கை. அவர்களே! சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற திருS.தேவமனோகரன் திட்டமிடல் பிரதிக் கல்விப்பணிப்பாளர் வலிகாமம் கல்விவலயம் அவர்களே! திருவாளர் மா.ஆனந்தகுமார் கோட்டக் கல்விப்பணிப்பாளர், தெல்லிப்பழைக்கல்விக் கோட்டம் அவர்களே! கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கின்ற திரு S.விக்னராஜா ஓய்வுபெற்ற முகாமையாளர், இலங்கைவங்கி, யாழ்ப்பாணம் அவர்களே! ஆசியுரை வழங்க வருகை தந்துள்ளசிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக்குருக்கள் பிரதமகுரு, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை அவர்களே! கல்விசார் உத்தியோகத்தர்களே! பாடசாலையின் முன்னாள் அதிபர்களே! ஆசிரியர்களே! சகோதரப் பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! அன்பான மாணவச்செல்வங்களே! வங்கி முகாமையாளர்களே!

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான உத்தியோகத்தர்களே! பழைய மாணவர்சங்க, பாடசாலை அபிவிருத்திக்குழுஉறுப்பினர்களே! நலன்விரும்பிகளே! உங்கள் அனைவருக்கும் இனிய காலை வணக்கம்.

இன்றைய நாள் ஒரு மகத்தான நாள். பரிசளிப்பு நிதியத்தின் காரண கர்த்தாவும் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் முன்னாள் தலைவரும் சிறந்த சமூக சேவகியுமாகிய அமரர் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்களின் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் முகமாக அன்னையின் பெயரை எமது பாடசாலைக்குப்பொறிக்கப்பட்ட நன்னாள். எமது பாடசாலையில் சாதனைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்த, பரிசில்கள் பெற்ற மாணவர்களின் வெற்றிகளை மதித்துக் கௌரவிக்கும் பரிசுத்தின நிகழ்விற்கு வருகை தந்துள்ள உங்கள் அனைவருக்கும் எமது அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் சார்பில் நல்வரவு கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எமது பாடசாலையின் வளர்ச்சிக்கும் கல்வித்தர மேம்பாட்டிற்கும் தங்கம்மா அப்பாக்குட்டி அம்மாவின் ஆசிகளை முதற்கண் வேண்டுகின்றேன்.

எமது அன்பான அழைப்பை ஏற்று பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கௌரவ சிறுவர் விவகார அமைச்சர், இலங்கைஅவர்கள் மக்கள் பணியே மகேசன் பணியென எண்ணி தன்னின மக்களின் தன் மானம் காத்திட்ட கணவரின் வழியில் தொடர்ந்து அவர் விட்டுச் சென்ற பணியாற்றுபவர்.தமிழர்கள் சுய கெரவத்துடன் நிம்மதியாக வாழவேண்டும் எனற நோக்கோடு தொழிற்படுபவர். தமிழ் பெண்கள் விதவைகள் அநாதைக் குழந்தைகள் எதிர் நோக்கும் இன்னல்கள் இதயம் கொதித்து தன்னாலான உதவிகள் செய்யும் உயர்ந்த உள்ளம் படைத்தவர்.தன்னலங் கருதாது தன் மக்கள் நலமே கருதிச் செயற்படும் உத்தமியாகிய தாங்கள் உலகம் போற்றும் அன்னையின் பள்ளியில் ஆண்டு விழாவில் பிரதம அதிதியாய் கலந்து சிறப்பிப்பது அன்னைக்கம் எம் பள்ளிக்கும் கிடைத்த பெரும் பேறாகும்.

அடுத்து சிறப்பு விருந்தினர்களாக கலந்து விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற வலிகாமம் வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு S. தேவமனோகரன் Sir வலிகாமம் வலயப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கான செயற்பாடுகளைத் சிறந்த முறையில் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துபவர். எமது பாடசாலையின் கல்வி அபிவிருத்திக்கு வேண்டிய உதவிகள் செய்பவர்.நல்லுள்ளம் கொண்டவர். கல்விப்புலத்தோர் அனைவராலும் சாந்தமாகப் பழகிக் கொள்பவர்.மிகுந்த இறை நம்பிக்கை கொண்டவர்.உயர் பண்பு கொண்டவர். எங்களின் தேவைகள் அறிந்து இன்முகத்துடன் வரவேற்று நிறைவேற்றித் தருபவர். கடந்த ஆண்டே எமது பாடசாலைக்கு இரண்டு மாடிக்கட்டடம் கட்டுவதற்கான முன் மொழிவை அனுப்பியவர்.

அடுத்து பாடசாலையின் முன்னாள் அதிபரும் தெல்லிப்பழைக் கோட்டக்கல்விப் பணிப்பாளருமாகிய திருவாளர் மா. ஆனந்தகுமார் அவர்கள் எமது பாடசாலையில் 01.09.2005 தொடக்கம் 16.11.2011 வரை அதிபராகக் கடமையாற்றியவர்.இவர் அதிபராகக் கடமையேற்ற பின்பு எமது பாடசாலை சகல வழிகளிலும் வளர்ச்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்தது. இடப்பற்றாக்குறையாக இருந்த எமது பாடசாலையின் தேவைகளை அறிந்து அதனை வலயக்கல்வி அலுவலகத்திற்கு முன்வைத்து இரண்டுமாடிக்கட்டடம் கட்டுவித்தவர். கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம் என பாடசாலையின் பெயரை மாற்றம் செய்தவர்.

தரம்-5 புலமைப்பரிசில்ப் பரீட்சையில் சித்திபெறும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டது. பாடசாலைக்கு ஒரு கோயில் மிகவும் அவசியம் என்பதனை உணர்ந்து தனது மாமியார் திருமதி.இராசா பாக்கியம் அவர்களின் நினைவாக அவரது மகன் திரு இ.ரவீந்திரன் (செயலாளர், கல்விபண்பாட்டலுவல்கள்விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு) அவர்களின் நிதியுதவியுடன் தற்போதுள்ள ஆலயத்தைக் கட்டுவித்தவர். கலட்டியாய் இருந்த சாலையை கல் மண் கொண்டு திருத்தி கல்விச் சாலையாக மாற்றி இன்றைய வளர்ச்சிக்கு அன்றே களம் அமைத்தவர். எமது கோட்டத்திற்கு பணிப்பாளராக வந்து சில மாதங்களே ஆனாலும் எங்கள் பாடசாலையின் வளர்ச்சியில் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டுவருபவர்.

கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற எமது பாடசாலையின் பழைய மாணவனும் இலங்கை வங்கியின் ஓய்வு பெற்ற முகாமையாளரும் சிறந்த பரோபகாரியும் அரிமாக் கழக உறுப்பினராகவும் இருந்து சேவையாற்றுகின்ற திரு S விக்னராஜா அவர்கள் எமது பாடசாலைக்கு கௌரவ விருந்நினராக வருகை தந்தமையை எண்ணி மகிழ்வடைகின்றோம். நீண்டகாலமாக எமது பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு பணமாகவோ பொருளாகவோ உதவி செய்து வருபவர்.பரோபகார சிந்தை உடையவர். எமது பாடசாலையில் மட்டுமன்றி ஏழை குடும்பங்களுக்கும் உதவிகள் செய்பவர். கல்விக்கு இடையூறாக காசு இருக்கக் கூடாதென்று உயர் கல்வி வாய்ப்புப் பெறுகின்ற வறிய மாணவர்களுக்கு வாரி வழங்குபவர். எமது பாடசாலையின் மைதானத் தேவையை நன்குணர்ந்து கடந்த மூன்று ஆண்டுகள் தன் சொந்தப் பணத்தில் மைதானத்தைப் பெற்றுத் தருவதற்கு கடும் பிரயத் தனம் செய்து வருகின்றார். தாங்கள் எமது பாடசாலைக்கு ஆற்றுகின்ற பணிகள் அளப்பரியன. இத்தயை நல்லுள்ளம் கொண்ட தாங்கள் எமது அழைப்பை ஏற்று வருகை தந்து சிறப்பித்தமைக்கு எனது மனப்பூர்வமான நன்றிகள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இந்நிகழ்வுக்கு ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கின்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக்குருக்கள் அவர்கள் எமது கல்லூரி அன்னையிடத்து மிகுந்த பற்றும், பாசமும் உடையவர். எமது அழைப்பை மனமுவந்து ஏற்று தம்முடைய திறந்த மனக்கண்ணாலே அவதானித்து நிறைந்த மனதோடு எமக்கு வாழ்த்தினை எடுத்துக் கூறியுள்ளார். அவருடைய ஆசியுரை எமக்கு சிறந்த வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

கல்வியில் கருத்தூன்றி நிற்கும் உத்தியோகத்தர்களே! எமது பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் சிறந்த முறையில் நடைபெறுவதற்கு பல்வேறு துறைகளிலும் மேற்பார்வை செய்தும் ஒழுங்கு படுத்தியும் ஆலோசனை வழங்கியும் ஆளணி வளங்களை தந்துதவியும் வருகின்றீர்கள். உங்கள் அனைவருக்கும் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அன்பான பெற்றோர்களே!**

உங்கள் மழலைகள் பரிசு பெறுவதைக் கண்டு மகிழ்வதற்காக வருகை தந்துள்ளீர்கள். உங்கள் வருகையைக் கண்டு நாம் மகிழ்வடைகின்றோம். நீங்கள் எப்பொழுதும் உங்கள் பிள்ளைகளின் கல்வியிலும் ஒழுக்கத்திலும் கண்ணுங் கருத்துமாக இருக்கவேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் உங்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

உங்களது முழுமையான ஒத்துழைப்பே உங்கள் பிள்ளைகளினதும், எங்கள் பாடசாலையினதும் வளர்ச்சிக்கும் சாதனைகளுக்கும் மூலகாரணமாகும். வலிகாமம் கல்வி வலயத்தில் ஆரம்பக்கல்விக்கு அத்திவாரமிடும் முதற்தரப் பாடசாலையாக விளங்கும் எமது வித்தியாலயத்தை நகர்ப்புறப்பாடசாலையைப் போன்று நவீன வசதிகளுடன் கூடிய சிறந்த பாடசாலையாக மென்மேலும்கட்டியெழுப்ப எம்முடன் தோளோடு தோள் சேர்ந்து ஒத்துழைக்குமாறு தங்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றேன்.

**எம் இனிய மாணவர்களே!**

உங்கள் பெற்றோர் நீங்கள் வீட்டிற்கும் நாட்டிற்கும் நல்லதோர் பிரஜையாக உருவாக வேண்டும் என்ற பேராவலோடு உழைக்கின்றார்கள் உங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்தவர்களாக நல்லவர்களாக தாய்நாட்டிற்கு சேவையாற்றும் தன்னலமற்ற சேவை உள்ளம் கொண்டவர்களாக வாழ்வதற்கு வழிகாட்டுவது எங்கள் கடமை என்பதை நாம் உணர்ந்து செயற்படுகின்றோம். நீங்கள் செல்லும் இடமெல்லாம் கல்வியிலும் கடமைகளிலும் ஒழுக்க விழுமியங்களிலும் சிறந்து விளங்கி ஆரம்பப் பாடசாலைத் தாயின் பெயரை நிலை நாட்டுவீர்களாக!

**எங்கள் வித்தியாலயம்!**

எங்கள் வித்தியாலயம் ஆங்கிலேயரின் வருகையின் போது அமெரிக்கன் மிஷன் என்ற பெயருடன் சிறிய கல்வி நிலையமாக 1832ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பின்பு மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் என்ற பெயருடன் இயங்கி வந்தது. 09.03.2009ம் ஆண்டு தொடக்கம் யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம் என்ற புதிய பெயருடன் இயங்கி வருகின்றது. 184வது அகவையில் காலடி வைத்துள்ள எமது பாடசாலை பல துறைகளிலும் வளர்ச்சி அடைந்து வருவது யாவரும் அறிந்ததே. எமது பாடசாலைக்குப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட தினத்தை நினைவு கூரும் வகையில் இன்றைய நன்னாளை எமது பாடசாலையின் பரிசுத்தினமாகப் பிரகடனம் செய்து பரிசுத்தினத்தை கொண்டாடி வருகின்றோம்.

இங்கு அரச பாடத்திட்டத்துடன் தரம் 1-2 ல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஆசிரியர் ஒருவரை நியமித்து ஆங்கில பாடம் கற்பித்து வருகின்றோம்.தகவல் தொழில் நுட்பத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து தரம் 1- 5 வரை அனைத்து மாணவர்களுக்கும் கணணிக்கல்வி கற்பித்து வருகின்றோம். பிள்ளைநேயப் பாடசாலை அம்சங்களைக் கொண்ட முதல் நிலை ஆரம்பப் பாடசாலையாக மிளிர்கின்ற எமது பாடசாலை மேலும் பல் வழிகளிலும் வளர்ச்சிபெற பெற்றோர்களினதும், பழைய மாணவர்களினதும் உதவிகள் தொடர்ந்தும் கிடைப்பது வரவேற்கத்தக்கது.

**கல்விசார் செயற்பாடுகள்**

எங்கள் வித்தியாலயம் 300 ற்கும் மேற்பட்ட மாணவர்களை தன் நிழலில் அணைத்து பண்பாட்டு விழுமியங்களுக்கு ஏற்ப கல்வியில் உயர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. எமது மேற்பார்வையின் கீழ் இயங்கிவரும் கலைமகள் முன்பள்ளியில் 70 ற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசிரிய ஆளணியினர்**

எமது பாடசாலையில் தற்போது 12 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர்.

1. சின்னத்துரை சிவகுமாரன்

   அதிபர் SLPS III, B.A Dip in. Edu, M.E.d

2. திருமதி பாக்கியலக்சுமி தவக்குமார்

   பிரதி அதிபர் SLTS I, பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி

3. திருமதி யோகேஸ்வரி சூரியகுமார்

   SLTS 2- I, பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி

4. திருமதி கலாவல்லி தேவகுமார்

   SLTS I . பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி

5. திருமதி சிவனேஸ்வரி பரமசிவம்

   SLTS - I .கலைப்பட்டதாரி ,பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி

6. செல்வி சாரதா நவரத்தினம்

   SLTS 2- I .பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி

7. திருமதி சிவாணி வேல்முருகு

   SLTS 2- I .பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி

8. திருமதி தவராணி பிறேம்குமார்

   SLTS 2- I .பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி

9. திருமதி உதயகலா சிவநாதன்

   SLTS 2- II . B.A (Hons),Dip in. Edu

   திரு அம்பலம் ஸ்ரீதரன்

   SLTS 2- II பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி

10. திருமதி ஜெயலக்குமி கரன்

    SLTS 2- II . B.A (Hons),Dip in. Edu

திருமதி யசோதா சத்தியமூர்த்தி

SLTS 2- II வணிகப்பட்டதாரி

11. திருமதி சுஜாத்தா சிவலிங்கம்

    SLTS 2- II .கலைப்பட்டதாரி பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய மாணவர் சங்க நிதியில் கற்பிக்கும் ஆசிரியர்கள்.

1. செல்வி தி. அன்சலா – கணனி ஆசிரியர்
2. செல்வி தே. விதுஷா – ஆங்கில ஆசிரியர் (தரம் 1,2)

## கல்வியியற் கல்லூரி ஆசிரியர்கள்

1. திரு ப.உ மேசன்
2. செல்வி ம.யாழினி
3. செல்வி ச.சாருகி

## கல்விசாரா ஊழியர்

1. திரு ச.மதனமோகன் (ii)

## இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர்கள்

1. திருமதி அனுலா அருந்தவநாதன்
   கடமையேற்ற திகதி - 06.01.2014
   இடமாற்றம் பெற்ற திகதி - 05.05.2015
   பாடசாலையின் பெயர் - யா/பருத்தியடைப்பு கதிரேசானந்தா வித்தியாயலயம்

2. திருமதி காஞ்சனா சிவரூபன்
   கடமையேற்ற திகதி - 02.01.2014
   இடமாற்றம் பெற்ற திகதி - 05.05.2015
   பாடசாலையின் பெயர் - யா/ ஐயனார் வித்தியாலயம்

திருமதி அனுலா அருந்தவநாதன் அவர்கள் இப்பாடசாலையில் கடமையாற்றிய காலப்பகுதியில் தரம் 5 வகுப்பாசிரியராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் மாணவர்களுக்கு சிறப்பாகக் கற்பித்தவர்.

திருமதி காஞ்சனா சிவரூபன் அவர்கள் தரம் 02 வகுப்பாசிரியராகக் கடமையாற்றியது மட்டுமன்றி பாடசாலையின் வளர்ச்சியில் அதீத அக்கறை உடையவர். தினமும் பாடசாலையின் சுற்றுப்புறச் சூழலின் சுத்தத்தை அவதானிப்பவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் விளைவாக 2015 ம் ஆண்டு சிறந்த சுகாதார மேம்பாட்டுப் பாடசாலைக்கான கௌரவிப்பு விழாவில் எமது பாடசாலை வெண்கலப் பதக்கம் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி இணைபாடவிதானச் செயற்பாடுகளில் எமது பாடசாலை பல பரிசில்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவர்களின் சேவை சிறப்புற வாழ்த்துக்கள்.

**மாணவர் விபரம் - 2016**

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1A | 39 | 31 | 70 |
| 2A | 33 | 27 | 60 |
| 3A | 40 | 22 | 62 |
| 4A | 28 | 29 | 57 |
| 5A | 31 | 36 | 67 |
| மொத்தம் | 171 | 145 | 316 |

## கடமையுணர்வு மிக்க பிரதி அதிபர்

எமது பாடசாலையில்பிரதி அதிபராகக் கடமையாற்றும்திருமதி பா. தவக்குமார் ஆசிரியர் அவர்கள் மகவும் சுறுசுறுப்பானவர். எமது பாடசாலையின் பிரதி அதிபராக இருந்து தனது கடமைகளைத் திறம்பட நிறைவேற்றுபவர். பாடசாலையின் கற்றல் செயற்பாடுகளில் முழு மனதுடன் ஒத்துழைப்பு நல்கி பாடசாலையின் வளர்ச்சியைக் கண்ணுங்கருத்துமாகக் கொண்டு செயற்பட்டு வருபவர்.பாடசாலைச் சமூகத்தில் நன்மதிப்புப் பெற்றவர்.மாணவர்களின் நலனிலும் கல்வி வளர்ச்சியிலும் அதீத அக்கறை உடையவர். அவரது பணி சிறக்க வாழ்த்துக்கள்.

## கடமையுணர்வுடன் அயராது உழைக்கும் ஆசிரியர்கள்

பாடசாலையின் முகாமைத்துவமும் கற்றல்,கற்பித்தல் செயற்பாடுகளும் நல்ல முறையில் நடைபெற ஆக்கத்துடனும் ஊக்கத்துடனும் முழுஒத்துழைப்பு நல்கிப் புரிந்துணர்வுடன் செயற்படும் ஆசிரியர்களே பாடசாலையைத் தாங்கி நிற்கும் தூண்கள். மாணவச் செல்வங்களின் கல்வி, ஒழுக்கம், இணைபாடவிதானச்செயற்பாடுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்கத்துடன் செயற்பட்டு பாடசாலைக்குப் பெருமை சேர்த்து பாடசாலையின் புகழை உலகறியச் செய்பவர்கள். மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டி அவர்களின் சாதனைகளுக்குக் கர்த்தாக்களாக அமைபவர்கள்.

பாடசாலை நிர்வாகத்திற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி பாடசாலையின் வளர்ச்சியிலும், மாணவர்களின் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டவர்கள். வருடாந்தம் நடைபெறும் புலமைப்பரிசில் பரீட்சைக்கு பரீட்சையின் நோக்கில் சிறந்த திட்டமிடலுடன் பல்வேறு செயற்பாடுகளை முன்வைத்து விடாமுயற்சியுடன் அயராது உழைத்து சிறந்த உயர் பெறுபேறுகளைப் பெற்று எமது பாடசாலையின் பெயரினை எல்லோர் மனங்களிலும் நிலைக்கச் செய்வதுடன் தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்தில் எமது ஆரம்பப் பாடசாலை முதற்தரப் பாடசாலையாக மிளிரச் செய்கின்ற பெருமை எமது ஆசிரியர் குழாமையே சாரும்.

**மாணவர்களின் சாதனைகள்.**

தரம் 5 மாணவர்களின் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளே இப் பாடசாலையின் தரங்காட்டிகளாக உள்ளன. கடந்த வருடம் நடைபெற்ற புலமைப் பபரிசில் பரீட்சையில் 52 மாணவர்கள் தோற்றி 09 மாணவர்கள் சித்தியடைந்து பாடசாலைக்குப் புகழ் சேர்த்துள்ளனர். 100 புள்ளிக்கு மேல் 69.23% மான மாணவர்கள் பெற்றுப் பாடசாலைக்குப் புகழ் சேர்த்துள்ளனர். 2014இல் 21 மாணவர்கள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தெல்லிப்பழைக் கோட்டத்தில் முதற் தரப் பாடசாலையாக எமது பாடசாலை மினிர்ந்தமை குறிப்பிடத் தக்கது.

வருடாவருடம் புலமைப் பரிசில் பரீட்சையில் பெருமளவு மாணவர்கள் சித்தி பெறுவதற்கு உந்து சக்தியாக அமைந்த தரம் 1 – 5 வரை கற்பித்த சகல ஆசிரியர்களையும் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். எதிர்காலத்தில் அவர்கள் மேலும் சிறந்த சாதனைகள் படைத்து ஞாலம் போற்றும் நற்பிரஜைகளாக வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

பாடசாலைமட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள்.

1. செல்வி. யேசுராசா ஜெரிஸ்மா
2. செல்வி. நாகரட்ணம் சிந்தூரி
3. செல்வி. தவராசா மதுமிலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலையின் வளர்ச்சியின் அடித்தளமாக அமைந்துள்ள எமது பாடசாலை ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவர்கள். மாணவர்களுக்கு அத்தகைய ஆற்றலை வளர்ப்பதில் தமது பொறுப்பினை நன்குணர்ந்து ஐந்து ஆண்டுகளாக அவர்களை ஊக்குவித்து வழிகாட்டியமை இப்ப பாடசாலையின் சகல ஆசிரியர்களினதும் ஒட்டு மொத்தப் பணி என்பது குறிப்பிடத்தக்கது. தரம்5 வகுப்பில் மேலதிக நேரங்களில் தமது சுகதுக்கங்களை மறந்து அர்ப்பணிப்போடு சேவையாற்றிய செல்வி. ந.சாரதா, திருமதி. த.பிறேம்குமார் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள். புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலைச் செயற்பாடுகளில் பூரண ஒத்துழைப்பு நல்கித் தமது பிள்ளைகளின் கல்விச் சாதனைகளிற்கு உறுதுணை அளித்தவர்கள் அம் மாணவர்களின் பெற்றோர்கள். எமது வழிகாட்டலில் எம்மோடு தோளோடு தோள் நின்றுழைத்த பெற்றோர்களுக்கும் இவ்விடத்தில நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

| ஆண்டு | தோற்றிய மாணவர் | சித்திபெற்ற மாணவர் | அதிகூடிய புள்ளி | சித்திவீதம் | 100புள்ளிக்கு மேல் பெற்றோர் | 100 புள்ளிக்கு மேல் சித்தி வீதம் |
|---|---|---|---|---|---|---|
| 2012 | 49 | 02 | 170 | 4% | 25 | 51% |
| 2013 | 49 | 08 | 176 | 16.32% | 34 | 69.3% |
| 2014 | 69 | 21 | 178 | 30.4% | 53 | 76.8% |
| 2015 | 52 | 09 | 177 | 17.3% | 36 | 69.2% |

**எமது பாடசாலைக் கல்விக்குப் பின்னரான கௌரவம்**

எமது பாடசாலையில் தம் கல்வியை ஆரம்பித்துத் தரம் 05 வரை கற்று புலமைப்பரிசில் பரீட்சையிலும் சித்தி பெற்று சிறப்பாகத் தமது இடைநிலைக் கல்வியைக் கற்று பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகிய எமது குழந்தைகளாகிய,

1. செல்வன்.மனோகரன் டக்ஸன் - யா/இந்துக்கல்லூரி - பெறியியல்பீடம் பேராதனை
2. செல்வி.துரைசிங்கம் அபிராமி -யா/கொக்குவில்இந்துக்கல்லூரி - பெறியியல்பீடம் பேராதனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. செல்வன்.சுரேஸ்குமார் சஜீவன் - யா/கொக்குவில்இந்துக்கல்லூரி - கலைப்பீடம் பேராதனை

4. செல்வி.ஸ்ரீதரன் சுகன்யா -யா/கொக்குவில்இந்துக்கல்லூரி – விஞ்ஞானப்பீடம் யாழ்ப்பாணம்

## செயற்பாடுகளும் வெற்றிகளும்

### தமிழ்மன்றம்.

பொறுப்பாசிரியர்:- திருமதி. சி.பரமசிவம்

எமது பாடசாலையில் இயங்கி வரும் தமிழ் மன்றமானது மாணவர்களின் தமிழ் அறிவை மேம்படுத்துதம் நோக்கில் வாசிப்புத் திறன், ஆக்கத்திறன், பேச்சுத்திறன், ஆற்றுகைத்திறன் போன்றவற்றை விருத்தி செய்யும் நோக்கில் செயற்பட்டு வருகின்றது. கலைத்துறைச் செயற்பாடுகளில் மாணவர்களின் திறன்களை ஊக்குவிக்கவும் தலைமைத்துவப் பண்பு விருத்தியை வளர்த்து எடுக்கவும் பொறுப்பாசிரியர்கள் மன்றச் செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தி வருகின்றனர்.

### இந்துமாமன்றம்.

பொறுப்பாசிரியர்:- திருமதி. யோ.சூரியகுமார்.

இந்துமாமன்றமானது மாணவர்களிடையே இறை நம்பிக்கையையும் சமய அறிவையும் வளர்க்கும் செயற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றது. அதுமட்டுமன்றி நவராத்திரிவிழா, தைப்பூசத்தினம், நயன்மார்களின் குருபூசைத்தினம், கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அமமாவின் குருபூசைத்தினம் ஆகிய காலப் பகுதிகளில் மாணவர்களிடையே போட்டிகள் நடாத்தி சான்றிதழ்கள் வழங்கி ஊக்குவித்து வருவதுடன் மேற்கூறிய தினங்களில் பாடசாலையில் விசேட பூழசை, கலைநிகழ்வுகளை நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

### ஆங்கில மன்றம்

பொறுப்பாசிரியர் :- திருமதி.ய.சத்தியமூர்த்தி

சர்வதேச மொழியின் முக்கியத்துவத்தை உயர்ந்து தரம் 1-5 வரை சகல வகுப்புக்களுக்கும் ஆங்கில மொழி கற்பிக்கப்படுகின்றது. மாணவர்கள் கோட்ட வலய மட்டப் போட்டிகளில் பஞகுபற்றி வெற்றியீட்ட வருவத குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| போட்டி | மாணவர் பெயர் | தரம் | கோட்ட மட்டம். |
|---|---|---|---|
| CopY Writing | P. Shamanthi | 3 | 3 |
| Reading aloud | S. Mathulan | 4 | 2 |
| Group song | | Pri – 1 | 3 |
| ஆக்கத்திறன் வெளிப்பாடு | த. மதுமிலா | | 5 |
| சித்திரம் | கோ. வேணி | 2 | 1 |
| | சா. சாம்பவி | 3 | 2 |
| | சி. தர்சிகா | 5 | 1 |
| திருக்குறள் மனனம் | க. ரக்ஷிதள் | 1 | 2 |
| சிறுவர் நாடகம் | | 4 – 5 | 2 |
| பொது அறிவுப் போட்டி | | 5 | 1 |
| செயற்பட்டு மகிழ்வோம் | | 3 | 4 |

**பாடசாலை பெற்ற விருதுகள்**

16.11.2015 அனறு வலிகாமம் கல்வி வலயத்தினால் நடாத்தப்பட்ட வலய மட்ட சாதனையாளர் தின கௌரவிப்பு விழாவில் 2014ம் ஆண்டுக்குரிய வெளிவாரி மதிப்பீட்டில் எமது பாடசாலை அதிகூடிய புள்ளிகளைப் பெற்றமைக்காகவிருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட சிறந்த சுகாதார மேம்பாட்டுப் பாடசாலைக்கான கௌரவிப்பு நிகழ்வில் எமது பாடசாலைக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.

கல்விக் குரல் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற 9 மாணவர்களையும் கற்பித்த ஆசிரியர் செல்வி. சாரதா நவரத்தினம் அவர்களும் சிறப்பாக வழிகாட்டிய இப்பாடசாலையின் அதிபரும் தினக்குரல் நிறுவனத்தினால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

2015 ம் ஆண்டு சிறப்பாக நடைபெற்ற இணைபாடவிதானச் செயற்பாடுகள்

1. தரம் 4 சுற்றாடல் முகாம்
2. தரம் 3 கணித முகாம்
3. கல்விக் கண்காட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மாணவர்கள் போக்குவரத்துச் செய்யும் முறைகள்
5. போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடித்தல்(அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடு)

## ஒழுக்காற்றுக்குழு

எமது வித்தியாலயத்தில் ஒழுக்காற்றுக் குழுவானது அதிபர் திரு.சி.சிவகுமாரன் அவர்களைக் காப்பாளராகவும் திருமதி சி.பரமசிவம் திருமதி யோ. சூரியகுமார் செல்வி.ந.சாரதா ஆகிய ஆசிரியர்கள் உறுப்பினர்களாகச் செயற்பட்டு மிகவும் வினை திறனுடனும் குறிக்கோளுடனும் இயங்கி வருகின்றது.இக்குழு மூலம் மாணவர்களின் சுத்தம், பிந்திவரும் மாணவர்களின் வரவைக் குறைத்தல் வரவொழுங்கு, நடத்தைகள் ஆகியன கவனிக்கப்படுகின்றன.

இக்குழுவின் சிறந்த செயற்பாட்டின் மூலம் எமது நாட்டில் நல்லொழுக்கம் உள்ள மாணவர்கள் உருவாக்கப்படுகின்றார்கள்.

## பாடசாலை அபிவிருத்திக்குழு

பாடசாலையின் அபிவிருத்திக்கு பெருமளவில் உதவி செய்யும் அமைப்பாக இச்சங்கம் விளங்குகின்றது. பாடசாலையின் கல்வி சார் வளங்கள் பௌதிக வளங்கள் ஆகியவற்றைப் பெற்றுக் கொடுப்பதில் பக்ககலமாக இயங்கி வருகின்றது. இத்தகைய செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் இக்குழுவின் செயலாளராகத் திரு பொ. சபீந்திரன் அவர்களும் பொருளாளராக திருமதி.பா.தவக்கமார் அவர்களும் உறுப்பினர்களாக திருமதி சி. பரமசிவம் ஆசிரியர், செல்வி ந.சாரதாஆசிரியர், திருமதி.சு.சிவலிங்கம்ஆசிரியர், திருமதி.த.பிறேம்குமார் ஆசிரியர், திரு.ஐ.சிவலோகநாதன் பெற்றோர், திரு.அ.ஜெயக்கமார் பெற்றோர், திருமதி சி. மங்களம் பெற்றோர், திருமதி.வ.தவரூபன் பெற்றோர், திருமதி.யோ.யாழினிபெற்றோர் திரு.செ.ஜெயானந்தகுமார் பெற்றோர், திரு.S.விக்னராஜா (பழைய மாணவன்) திருமதி.ஜெ.மயில்வாகனம் (வலய கல்விப்பிரதிநிதி) ஆகியோர் இணைந்து பாடசாலையின் வளரச்சிக்கு மிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆசிரியர் நலன்புரிக் கழகம்

எமது கல்லூரியில் உள்ள கல்விசார் கல்வி சாரா ஊழியர்கள அனைவரையும் உள்ளடக்கியதாக இக்கழகம் இயங்கி வருவதுடன் இக்கழகத்தில் அங்கம் வகிக்கின்ற அனைவரின் நலனிலும் புரிந்துணர்வோடு பங்கேற்று செயற்பட்டு வருகின்றமை சிறப்பிக்குரியது.

## ESDFP நிதி ஒதுக்கீடுகள்

| ஆண்டு | ஆசிரியர் செயற்பாடு | மாணவர் செயற்பாடு | தர உள்ளீடு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2012 | 11 565.00 | 23 135.00 | 118 570.00 | 153 270.00 |
| 2013 | 10 965.00 | 24 650.00 | 120 600.00 | 156 215.00 |
| 2014 | 7 945.00 | 24 400.00 | 110 000.00 | 142 345.00 |
| 2015 | 11 610.00 | 37 750.00 | 115 000.00 | 164 360.00 |

மாணவர்களின் கற்றற் திறனை விருத்தி செய்யும் முகமாகவும் ஆசிரியர்களின் ஆளுமையை மேம்பாடடையச் செய்யும் முகமாகவும் கடந்த ஆண்டு ESDFPசெயற்றிட்டத்தின் மூலம் பின்வரும் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

### மாணவர் மட்டச் செயற்பாடுகள்

தரம் 1 எழுத்துத் திறன் விருத்தி

சுற்றாடல் அலகு ரீதியான செயன்முறை

தரம் 3 கூட்டல் கழித்தல் பிரசினங்களைத் தீர்த்தல்

சுற்றாடல் முகாம் கணிதமுகாம் மொழித்திறன் விருத்தி

தரம் 4 சுற்றாடல் முகாம் கணிதமுகாம்

தரம் 5 கணிதச் செய்கை மொழித்திறன் விருத்தி விஞ்ஞானச் செய்முறை.

### ஆசிரியர் மட்டச் செயற்பாடுகள்

ஆசிரியர்களின் வாண்மைத்திறனை விருத்தி செய்யும் நோக்குடன் உரிய வளவாளர்களை அழைத்து மேற்கொள்ளப்பட்ட செயலமர்வுகள்.

1. ஆக்கத்திறன் விருத்தி கட்டுரை
2. மேலைத்தேய வாத்தியம் இசைக்கும் திறன் விருத்தி
3. மேந்தலை எறியீ, மல்ரி மீடியாப் பயன்பாடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. விடயத்திறன் அட்டவணை தயாரித்தல்
5. வினாத்தாள் தயாரித்தல்.

**பெறப்பட்ட அன்பளிப்புகள்**

1. வருடாந்த விளையாட்டுப் போட்டிக்கான நிதியீட்டம்
2. ஓகன்

**பரிசளிப்பு விழாவிற்கான அன்பளிப்புகள்**

1. கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி பரிசளிப்பு நிதியம்
2. துளசி உருத்திரன் ஞாபகார்த்த நிதியம்
3. பாடசாலை பரிசளிப்பு விழா நிதியம்

அன்பளிப்புக்களை வழங்கிய அனைத்து உள்ளங்களிற்கும் இந்த வேளையில் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதோடு இவ்வாறான நல்லுள்ளங்களின் செயற்பாடுகளை வரவேற்க எந்த வேளையிலும் தயாராக உள்ளோம்.

**பாடசாலையில் உள்ள நிதியங்கள்**

| நிதியத்தின் பெயர் | ஆரம்பித்தவதர் பெயர் | நோக்கம் |
|---|---|---|
| கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி பரிசளிப்பு நிதியம் | ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்ததானம் | ரூபாய் 50 000வைப்பிலிடப்பட்டு அதன் மூலம் பெறப்படும் வட்டிப் பணத்தில் பரிசளிப்புவிழா நடாத்துதல் |
| துளசி உருத்திரன் ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதியம் | திரு.மு.உருத்திரன் | வருடாந்தம் தரம் 5புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் மாணவர் ஒருவருக்கு 1000ரூபபாய் வீதம் பரிசில் வழங்குதல் |
| சேல்வி.பகவதி நவரட்ணம் | திருமதி.தவமணிதேவி துரைசிங்கம், திருமதி.யோகேஸ்வரி ஸ்ரீரவீந்திரன் | ரூபாய் 50 000வைப்பிலிடப்பட்டு வட்டிப் பணத்தில் வருடாந்தம் ஆங்கிலதின விழா நடாத்துதல் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடசாலையின் தேவைகள்**

1. விளையாட்டு மைதானம்
2. சிறுவர் பூங்கா
3. இந்துக்கோயில்
4. கிறிஸ்தவ ஆலயம்
5. பிரார்த்தனை மண்டபம்
6. கணனிக் கூடம்
7. பல்லூடகக் கற்றல் அறை
8. போட்டோப் பிரதி இயந்திரம்
9. இலத்திரனியல் மணி

**நன்றியுரை**

இன்றைய விழவிற்கு பெரும் வேலைப்பழுவின் மத்தியிலும் பிரதம விருந்தினராகக் கலந்து விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் திருமதி. விஜயகலா மகேஸ்வரன் அவர்களுக்கு எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

எமது அழைப்பை ஏற்று சிறப்புவிருந்தினராக வருகைதந்து விழாவை சிறப்பித்துக் கொண்டிருக்கும் வலிகாமம் வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.எஸ்.தேவமனோகரன் ஐயா அவர்களுக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அடுத்து எமது அழைப்பை ஏற்று சிறப்புவிருந்தினராக வருகைதந்து விழாவை சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது முன்னாள் அதிபரும் தெல்லிப்பழைக்கோட்டக் கல்விப் பணிப்பாளருமாகிய திரு.மா.ஆனந்தகுமார் ஐயா அவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

அடுத்து கௌரவ விருந்தினராக வருகைதந்து விழாவை கௌரவித்துக் கொண்டிருக்கும் இலங்கை வங்கி யாழ்ப்பாணக் கிளையின் ஓய்வுபெற்ற முகாமையாளர் திரு.எஸ். விக்கினராஜா ஐயா அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இன்றைய விழா சிறப்புற நல்லாசிகள் வழங்க வருகைதந்திருக்கும் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ.வா.அகிலேஸ்வரக் குருக்கள் அவர்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிகின்ற வலயக்கல்விப் பணிப்பாளர், பிரதிக்கல்விப் பணிப்பாளர், உதவிக்கல்விப்பணிப்பபாளர்கள், கணக்காளர், நிர்வாகஉத்தியோகத்தர்கள் மற்றும் அனைத்து அலுவலகர்களுக்கும் இன்றைய நிகழ்விற்கு வருகை தந்துள்ள ஆசிரியஆலோசகர்கள், அயற்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள்,உத்தியோகத்தர்கள், வங்கிமுகாமையாளர்கள், பெற்றோர்கள், பழையமணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

எமது பாடசாலைக்குத் தேவைகள் ஏற்படும் போது அவ்வப்போது ஒத்துழைப்பு வழங்கிவருகின்ற வலிவடக்கு பிரதேசபை உத்தியோகத்தர்கள், பொதுசுகாதாரப் பரிசோதகர் ஆககியோருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் இந்நிகழ்விற்குப் பணமாகவோ, பொருளாகவோ உதவி நல்கிய நல் உள்ளங்களிற்கும் இந்நிகழ்விற்கு மேடை, பந்தல், கதிரைகைள், ஒலியமைப்பு, மின்பிறப்பாக்கி ஆகியவற்றைவழங்கி உதவிய அனைத்து உள்ளங்களிற்கும் பாடசாலையின் பழையமாணவர் சங்க, பாடசாலைஅபிவிருத்திக்குழு செயலாளர்கள், உறுப்பினர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் இன்றைய விழாவில் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அனைத்து உள்ளங்களிற்கும் நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

நன்றி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org